# கற்பகம் திங்கள் இதழ்

KATPAKAM

விலை ரூபா 10/-

மலர்-02 ஒக்டோபர்-2009 இதழ்-24


## குறளமுதம்-24

வள்ளுவர் வாய்மொழியை எத்திறத்தாரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதைத் தரும்.

**அதிகாரம்-3 - அறத்துப்பால்-முனிவர் பெருமை**

**"உரன் என்னும் தோட்டியான் ஓர் ஐந்தும் காப்பான்
வரன் என்னும் வைப்பிற்கு ஓர் வித்து"**

*அறிவு என்னும் துறட்டியினால் ஐம்பொறிகளாகிய யானைகளை அடக்கிக் காப்பவன் (எல்லா நிலங்களுள்ளும்) மேலானது எனப்படும் வீட்டு நிலத்திற்கு விதை போன்றவன்.*

### உள்ளூராட்சித் திணைக்கள கண்காட்சியில்

# பனை தென்னை வள கூட்டுறவு நிறுவன உற்பத்திப் பொருட்கள்!

உள்ளூராட்சி திணைக்களம் ஏற்பாடு செய்திருந்த கண்காட்சி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் இம்மாதம் 18, 19 ஆகிய நாட்களில் நடைபெற்றபோது யாழ்.மாவட்டத்தில் உள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாசம், சித்த மருந்துகள் உற்பத்தி விற்பனவு வைத்தியசேவைக் கூட்டுறவுச் சங்கம், யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை, கூட்டுறவுத் திணைக்களம் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் என்பன தமது உற்பத்திப் பொருட்களை இங்கு காட்சிப்படுத்தின.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, சமூக நலத்துறை மற்றும் சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநரின் செயலாளர் ரங்கராஜன், வடமாகாண சபையின் பிரதம செயலாளர் ஆர்.சிவசுவாமி, யாழ்.அரச அதிபர் க.கணேஷ், மற்றும் யாழ் மாநகரசபை மேயர் திருமதி. யோகேஸ்வரி பற்குணராஜா, வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் எஸ்.சுப்பிரமணியசர்மா, யாழ்.கூ.அ.உ. ஆணையாளர் பொ.சிவலிங்கம் மற்றும் பலரும் விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

இக்கண்காட்சியில் பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ.சங்கம் தனது பனை வெல்லத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட பனை வெல்லம், பனம் பாணி, பனாட்டு, புழுக்கொடியல், மற்றும் பனை வளத்திலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய பனையோலையாலான கைப்பணிப் பொருட்களையும் காட்சிப்படுத்தியிருந்தது.

வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச. சமாசம் தனது சொந்த நிதியின்மூலம் அங்கத்தவர்களுக்கு வழங்கிவரும் மாதாந்த ஓய்வூதியத்திட்டம், விபத்து

(8ம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதியிடம் மகஜர் கையளிப்பு!

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா அவர்கள் ஊடாக 16 கோரிக்கைகள் அடங்கிய மகஜரை சங்கப் பிரதிநிதிகள் சமர்ப்பித்துள்ளனர்.

ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் மது உற்பத்தி, மதுசார உற்பத்தி ஆகியவற்றுக்கான வரி அறவீட்டை விலக்கிக் கொள்ளவும், சங்கங்கள் சாராய விற்பனையை மேற்கொள்வதற்கு அனுமதி கோரியும், சாராய உற்பத்தியை நவீனமயப்படுத்தக்கூடிய சாதனங்களைப் பெற்றுத்தருமாறும், வடிசாலைகளுக்கு கள்ளை அனுப்பி வைப்பதற்கு கொள்கலன்கள்(பவுசர்) பெற்றுத்தருமாறும், போத்தற்கள் உற்பத்தியை நவீனமயப் படுத்துவதற்கு வேண்டிய சாதனங்களை பெற்றுத்தருமாறும், பனை வெல்ல உற்பத்தியை சங்கங்கள் மேற்கொள்வதற்கு உரிய நிதி வசதி செய்து, அவற்றின் உற்பத்தி செலவைக் குறைத்து உற்பத்தியை அதிகரிப்பதற்கு வேண்டிய ஒழுங்குகள்

(8ம் பக்கம் பார்க்க)




சங்கங்கள், கொத்தணிகளால் நடத்தப்படுகின்ற முன்பள்ளிகளின் ஆசிரியைகளுக்கான மாவட்ட மட்டப் பயிற்சி சமாச மண்டபத்தில் கடந்த 12.10.2009ல் நடைபெற்றபோது சமாசத் தலைவர் த.சிவலிங்கம் ஆரம்ப உரை நிகழ்த்துவதையும் பயிற்சி விரிவுரையாளர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

சிந்தனைத்துளி

*“மக்களுக்கு சேவை செய்ய நினைப்பவன் எல்லா வகை ஆசைகளையும் துறக்க வேண்டும் ”!*

*--சுவாமி விவேகானந்தர்--*

## கற்பகக்கரு

### பங்களிப்பின் அவசியம்!

யாழ் குடாநாட்டில் தற்போது ஏற்பட்டுவரும் சமூக, பொருளாதார மாற்றங்களுக்கு ஏற்ப கூட்டுறவு நிறுவனங்கள் கூட்டுறவு தத்துவத்துக்கு ஏற்ப ஒன்றிணைந்து செயற்படவேண்டிய காலம் கனிந்துள்ளது.

ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின்பு தலைநகரிலுள்ள பாரிய நிதி நிறுவனங்கள், உற்பத்தி நிறுவனங்கள் யாழ்.குடாநாட்டை தினமும் முற்றுகையிட்ட வண்ணம் இருப்பதை காணக்கூடியதாக உள்ளது. இந்நிலை யாழ்.குடாநாட்டை எங்கு கொண்டுசென்றுவிடும் என்பதை இப்போதைக்கு ஊகிக்க முடியாவிட்டாலும் எதிர்காலத்தில் பல்வேறு சாதக, பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும் என்பதை அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

கொழும்பிலிருந்து பெருந்தொகையான உற்பத்திப் பொருட்கள் குடாநாட்டுக்கு தினமும் வந்துகொண்டிருக்கும்பொழுது இங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற எப்பொருளாவது தென்னிலங்கையில் சந்தைப் படுத்தப்பட்டுள்ளனவா என்பது கேள்விக்குறியாகவுள்ளது. விவசாய உற்பத்திப் பொருளான வெங்காயமும், கடல்சார் உணவுகளுமே-அதுவும் மிகக் குறைந்தளவே எடுத்துச் செல்லப்படுகின்றன.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தமட்டில் அவர்களது உற்பத்திப் பொருட்கள் எவையும் தென்னிலங்கைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக தகவல்கள் இல்லை. சங்கங்கள் தாம் உற்பத்தி செய்கின்ற பொருட்களை தென்னிலங்கைக்கு அனுப்புவதற்கு உரிய ஏற்பாடுகளை சமாசத்தின் மூலம் மேற்கொள்ளப்படவேண்டியிருப்பது இன்று முக்கிய தேவையாகவுள்ளது. இதனை யாழ்.மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு ப.தெ.வ.அ.கூ.சங்கங்களும், கொத்தனிகளும் உணர்ந்து செயற்பட வேண்டியது அவசியமாகும்.

இவர்களது செயற்பாடுகள் சமாச மட்டத்துடன் தொடர்பை ஏற்படுத்தி, அதன்மூலம் தங்களது உற்பத்திப் பொருட்களை தென்னிலங்கைக்கு எடுத்துச் செல்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சமாசம் வற்புறுத்தப்படுவதுடன், அதனை ஏற்று நடைமுறைப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை உரிய தரப்பினருடன் தொடர்பு கொண்டு எடுக்க வேண்டியது இன்று மிகவும் அவசியமான ஒரு தேவையாகவுள்ளது.

இந்நிலையில் இங்கு சமாசம் தனது பாரிய பொறுப்பை உணர்ந்து செயற்படுவதற்கு முன்வரவேண்டும். சங்கங்கள் தமது ஒவ்வொரு செயற்பாடும் சமாசத்தினூடாக முன்னெடுப்பதற்குரிய பங்களிப்பை சமாசத்திற்கு வழங்கி வருதல் அவசியமாகும். சமாசத்தினது வளர்ச்சி, செயற்பாடு சங்கங்களின பங்களிப்பிலேயே பெரும்பாலும் தங்கியுள்ளதென்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து செயற்பட வேண்டும்.

“ஒருவர் பலருக்காகவும், பலர் ஒருவருக்காகவும்” என்ற கூட்டுறவு இயக்கத்தின் தாரக மந்திரத்தின் பிரகாரம் நடந்துகொள்வதற்கு அனைத்து கூட்டுறவு நிறுவனங்களின் நிர்வாகிகளும் முன்வரவேண்டும் என்று கற்பகம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

*“அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்”*

-ஆசிரியர்-

# பனை தென்னை வள சங்கங்களின் நிகழ்வுகள்!

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிநெறி!

வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாசம் மாவட்ட மட்ட பாலர் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிநெறி ஒன்றை சமாச மண்டபத்தில் அண்மையில் நடத்தியது.

சமாசத் தலைவர் த.சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சிநெறியில் ப.தெ.வ.அ.கூ.சங்கங்களினாலும், கொத்தணிகளினாலும் நடத்தப்பட்டுவரும் பாலர் முன்பள்ளிகளின் ஆசிரியர்கள் 65பேர் கலந்துகொண்டனர்.


இப்பயிற்சியில் உளவளத்துறை விரிவுரையாளர் திருமதி.தி.சிவானந்தன், நடன ஆசிரியர் திருமதி வி.பாலகிருஷ்ணன், சமாசக் கல்வி உத்தியோகத்தர் திரு வ.சிவகுமார் ஆகியோர் விரிவுரையாற்றினார்கள்.

பயிற்சி முடிவில் சிறார்கள் பங்குபெற்ற ஆங்கிலப் பாடல் இறுவட்டுக் காட்சியும் காண்பிக்கப்பட்டது.

## நீர்வேலி தெற்கில் பனம்விதை நடுகைத் திட்டம்!

கோப்பாய் ப.தெ.வ.அ.கூ.சங்கம் வில்லுமதவடி, நீர்வேலி தெற்கில் பனம் விதை நடுகைத் திட்டத்தை சங்கத் தலைவர் இ.உதயசூரியன் தலைமையில் கடந்த 13-10-2009ல் ஆரம்பித்து வைத்துள்ளது.

இந்நிகழ்வில் சமாச பொதுமுகாமையாளர் ஜே.பி.குணரத்தினம், பனை அபிவிருத்திச்சபை உத்தியோகத்தர் தி.பன்னீர்செல்வன், நீர்வேலி தெற்கு விவசாய சம்மேளனத் தலைவர் கா.சிவபாலன், ஜே/262 கிராம அலுவலர் கே.சண்முகவடிவேல், அண்ணா ச.ச.நிலைய தலைவர் செ.நாகமணி ஆகியோர் கலந்துகொண்டனர்.



கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.சங்கத்தால் அண்மையில் நடத்தப்பட்ட 87வது சர்வதேச கூட்டுறவுதின விழாவின்போது கூட்டுறவுக் கொடியினை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் ஏற்றி வைப்பதை முதலாவது படத்திலும், மாவட்ட கூ.அபி.அலுவலர் இ.பாலச்சந்திரன் மற்று சங்கக் கல்வி உத்தியோகத்தர் சு.சிவலிங்கம் ஆகியோர் உரையாற்றுவதையும், அருகில் சங்கத்தலைவர், செயலாளர், உபதலைவர் அமர்ந்திருப்பதையும் கீழுள்ள படங்களிலும் காணலாம்.

## மரணநிதிக் கொடுப்பனவு

யாழ்.மாவட்ட ப.தெ.வ.அ.கூ. நிறுவனங்களின் ப.ந.கூ.சங்கம் மரணமடைந்த தனது உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுத் திட்டத்தின்கீழ் அகாலமரணமடைந்த வாமதேவன் (சுன்னாகம் ப.தெ.வ) குடும்பத்தினருக்கு ரூ.25 ஆயிரமும், இயற்கை மரணமடைந்த சி.செல்வராசா(வேலனை ப.தெ.வ.) குடும்பத்தினருக்கு ரூ.20 ஆயிரமும் கடந்த 06-10-2009ல் சமாச மண்டபத்தில் சங்கத் தலைவர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வின் போது வழங்கப்பட்டது.

# பனை தென்னை வள நிறுவனங்களின் அபிவிருத்தியில் முகாமையும் அது தொடர்பான தொழிற்பாடுகளும்!

வி.மாலினி
வலிகாமம் கொத்தணி

இன்றைய நவீன காலத்தை மையமாகக் கொண்டு முகாமையும், அதன் தொழிற்பாடுகளும் மிகவும் வேண்டப்படும் ஒன்றாகவே உள்ளது.

இதனால் எந்த கல்வி சம்பந்தமான அறிக்கைகளும் இன்று முகாமையை மையமாகக் கொண்டு சகல செயற்பாடுகளும் வளர்ந்து வருவதைக் காணக் கூடியதாக உள்ளது. எனவே இன்றைய பனை தென்னை வள நிறுவனங்களின் அபிவிருத்தியில் முகாமையும் அது தொடர்பான தொழிற்பாடுகளும் விருத்தி அடைந்ததாகவே காணப்படுகின்றது.

எனவேதான் இன்றைய முகாமை நவீனமயமாக்கப்பட வேண்டியதன் அவசியம் அனைத்து முகாமையாளர்களாலும் நன்கு உணரப்படவேண்டிய ஒன்றாக இருக்கின்றது. எனவே பனை தென்னை வள நிறுவனங்களின் முகாமை அமைப்பும் அதன் பயன் உறுதித்தன்மையை நாம் பெறவேண்டுமெனில் நாம் நவீனமயமான முகாமையை உருவாக்க வேண்டும்.

முகாமை என்பது நிறுவனங்களின் ஊழியர்களைக் கொண்டு கருமங்களை ஆற்றுவிப்பது தொடர்பான செயற்பாடு என்றே கூறுகிறார்கள். இங்கு முகாமையின் நோக்கம் எல்லாம் நிறுவனத்தின் சேவைக்கு அமர்த்தப்பட்டிருக்கும் ஊழியரிடமிருந்து எதிர்பார்த்த கடமையை அல்லது சிறந்த சேவையை பெறுவதும் நிறைவேற்றுவதும் ஆகும். இதனால் ஒவ்வொரு ஊழியருக்கும் என ஒதுக்கப்பட்ட வேலையை நிறைவேற்றிக் கொடுக்கும் பொறுப்புடைய கருமமாக முகாமைத்துவம் கொள்ளப்படுகின்றது.

ஒவ்வொரு நிறுவனமும் ஏதோ ஒரு நோக்கத்தைக் கொண்டு இயங்கி வரும் வேளையில் அந் நோக்கத்தை அடைவதற்கு அவை தமக்குக் கிடைக்கும் வளங்களையும் சிக்கனமாகப் பயன்படுத்த முற்படும். நிறுவனத்தின் வளங்களை இரண்டாக வகைப்படுத்தலாம்.

01. மனித வளம்
02. பௌதீக வளம்.

மனித வளமானது நிறுவ்னத்தின் ஊழியரை குறிப்பதையும், பௌதீக வளமானது காணி, கட்டடம், இயந்திரம் போன்ற அசையும், அசையாச் சொத்துக்களையும் குறிக்கின்றது. இந்த வளங்கள் ஒரு வரையறைக்கு உட்பட்டவை. இவற்றிலிருந்து உச்சப் பயன் பெற்று நிறுவனத்தின் நோக்கத்தை அடைய வைக்கும் கருமமே முகாமை என அறிஞர்கள் பலரும் கூறுகின்றனர்.

இந்த வகையில் நிறுவனங்களின் முகாமைத் தொழிற்பாடுகளான,

01. திட்டமிடல்.
02. ஒழுங்கமைத்தல்.
03. ஊக்கப்படுத்தல்.
04. கட்டுப்படுத்தல்.

என்ற நான்கு முக்கிய தொழிற்பாடுகளையும் மிகவும் திறம்பட ஆற்றல் வேண்டும்.மேலும் ஊழியர்களின் மொத்த வினைத்திறனையும் நிறுவனத்தின் நோக்கத்தினை அடையும் பொருட்டு உச்சமாகப்பெற்று நிறுவனத்தை அபிவிருத்திப் பாதையில் இட்டுச்சென்று இலாபத்தை அதிகரித்து இவ் இலாபப் பகிர்வுக்கு ஏற்ப திட்டமிடப்பட்ட செயற் திட்டங்களை நிறைவேற்ற முடியும்.

இதன்படி ஊழியர்களுக்கான சகல நலன்களையும் பெற்றுக்கொடுப்பதுடன், நிறுவனத்தின் நோக்கத்தை உச்ச மட்டத்தில் அடைய வைப்பதும் முகாமையின் முக்கிய பொறுப்பாகும்.

இரு நோக்கமும் முரண்பட்டவை என்பதால் அவற்றை இணைக்க வைப்பது முகாமையின் பிரதான கடமை எனக் கூறப்படுகின்றது. முகாமையின் தொழிற்பாடுகளையும், நிறுவன இலக்கினையும் கீழ் குறிப்பிடப்படும் வரைபடம் மிகவும் துல்லியமாக விளக்குகின்றது.




ஆகவே தொகுத்து நோக்குமிடத்து வரையறுக்கப்பட்டிருக்கும் பௌதீக வளங்களையும், மனித வளங்களையும், பயன்படுத்தி நிறுவனங்கள் தமது நோக்கத்தை அடைந்துகொள்ள வகைசெய்யும் கருமம் எதுவோ அதுவே முகாமையாக எல்லோராலும் கொள்ளப்படுகின்றது.

–வளரும்–



யாழ்.மாவட்ட ப.தெ.வ.அ.கூ.நி.ப.ந.கூ.சங்கம் மரணமடைந்த தனது உறுப்பினர் குடும்பத்தினருக்கு மரணக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வில் சங்கத் தலைவர் க.சுதாகரன் உரையாற்றுவதையும் அருகில் பிரமுகர்கள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.



வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாசத்தின் ஏற்பாட்டில் சங்கங்களால் நடத்தப்படுகின்ற முன்பள்ளிகளின் ஆசிரியைகளுக்கான மாவட்ட மட் பயிற்சி கடந்த 12-10-2009ல் நடைபெற்றபோது, சமூக நலத்துறை விரிவுரையாளரும், நடன ஆசிரியையும் பயிற்சி வழங்குவதையும், பயிற்சிபெறும் முன்பள்ளி ஆசிரியைகளையும் படத்தில் காணலாம்.

**இவ்வாக்கம் அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் சமர்ப்பணம்**

# முன்பள்ளி ஆசிரியர்கள் நல்மனப்பான்மை உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்!

*"கற்கை நன்றே! கற்கை நன்றே!*
*பிச்சை புகினும் கற்கை நன்றே!*

என்பது ஆன்றோர் வாக்கு. இது ஆசிரியர்கள் யாவரும் அறிந்ததே. கற்றது கைமண் அளவு, கல்லாதது உலகளவு என்பதுபோல முன்பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் தாம் கற்ற கல்வியை சிறார்களுக்கு செலுத்தும் ஒரு புத்தகம். மகாத்மா காந்தி பின்வருமாறு கூறுகின்றார். *"ஆசிரியர் பிள்ளைகளின் பாடப் புத்தகம்"*. எனவே முன்பள்ளி ஆசிரியர்கள் பொறுமை, அன்பு, ஆளுமை, கடமை, துணிவு, எதிலும் முன்மாதிரியாக இருக்க வேண்டியது அவசியமாகும். முன்பிள்ளைப் பருவத்தினரின் தேடலுக்கு ஆளுமையுடையவராக ஆசிரியர்கள் தம்மை வளர்த்துக்கொள்ள வேண்டும். *"எனது மனநிலையே இன்றைய பாடமாகும்"* என குழந்தை உளவியலாளர் றொஸ் என்ற விஞ்ஞானி கூறியிருக்கிறார்.

எனவே ஆசிரியர்கள் தங்களின் மனநிலைகளை மகிழ்ச்சியாக வைத்திருப்பதில் உறுதியாக இருக்க வேண்டும். *"ஆசிரியர்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்"* என்று தாகூர் கூறியிருக்கிறார். இந்த உதாரணங்களை ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும். *"தோட்டக்காரன்போல் ஆசிரியர் இருக்க வேண்டும்"* என்று பெஸ்லோறி எனும் குழந்தை உளவியலாளர் கூறுகின்றார். இதற்கமைய ஆசிரியர்கள் தங்களை பக்குவப்படுத்தி வைத்திருக்க வேண்டும்.

முன்பள்ளி என்பது குழந்தைப் பருவப் பிள்ளைகள் கூடும் இடமாகும். எனவே இப்பருவப் பிள்ளைகளின் வளர்ச்சி, அபிவிருத்தி பற்றி ஆசிரியர்கள் தெரிந்திருக்க வேண்டும். குழந்தைப்பருவத்து வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் நிகழ்வதால் ஜீன் பிஜாஜே 2-7 வயதுக்கிடைப்பட்ட பருவத்தை இரண்டாகப் பிரித்துள்ளார்.

01. எண்ணக்கருவிற்கு முற்பட்ட காலம் $2 - 4\frac{1}{2}$ வயது வரை.

02. உள்ளுணர்வுப் பருவம் $4\frac{1}{2} - 7$ வயது வரை.

எனவே பிள்ளைகளுக்கு இருக்க வேண்டிய கல்வி உரிமையை ஆசிரியர் விளங்கிச் செயற்பட வேண்டும். பிள்ளையின் கற்றலின் பண்புகளை இரண்டாக வகுக்கலாம்.

01. சூழலில் 02. முன்பள்ளியில்

**இ.தர்மசாந்தினி – ஆசிரியை,**
**அறிவொளி முன்பள்ளி,**
**குப்பிளான் தெற்கு.**

**சூழலில்:-**

கருவில் கற்கின்றது. கலாச்சார அனுபவங்களைத் தானாகவே செவிமடுத்து, சுவைத்து, செய்து பார்த்து, முகர்ந்து ஐம்புலன்களையும் பயன்படுத்தி தானாகவே அறிந்து கொள்கின்றது.

**முன்பள்ளியில்:-**

பிள்ளைக்குள் புதைந்திருக்கும் இயல்பான ஆற்றல்கள் வெளிக்கொணரப்படுகின்றது, மற்றவர்களை மதிக்கப் பழகுகின்றது, எழுத்துத் திறனுக்கான பயிற்சியைப் பெறுகின்றது, அறிவாற்றல்கள் விருத்தியடைகின்றது, புதிய சூழலில் ஒழுங்காக கற்கப் பழகுகிறது, சுயநம்பிக்கை உருவாகின்றது, அதிக செயற்பாடுகளில் ஈடுபட்டு புதிய எண்ணக்கருக்களைப் பெற்றுக்கொள்கின்றது. ஆகவே ஆசிரியர்கள் கடமையோடு செயற்படுங்கள்.

*பார்த்தேன் மறந்துவிட்டேன்*
*கேட்டேன் ஞாபகமிருக்கு*
*செய்தேன் மறக்கவில்லை*
*விளக்கம் பெறுகிறேன்.*

என எட்மன்வோக் என்ற விஞ்ஞானி கூறியிருக்கிறார். ஆசிரியர்களே! அனைவருக்கும் இந்தப் பகுதி சமர்ப்பணம். வாசியுங்கள், மறந்து விடாதீர்கள், விளக்கம் பெறுங்கள், செய்யுங்கள். அனைவரும் இணைந்து நல்ல சமூகத்தை உருவாக்க நல்ல மனிதரைப் படைப்போம் என உறுதி எடுங்கள்.

றொசன்பேக் என்ற விஞ்ஞானி ஒரு மனிதனின் தன்மைகளுக்கு ஏற்ப பின்வருமாறு புள்ளிகள் போடுகின்றார்.

| | |
|---|---|
| -அறிவாளியாக இருப்பவர் | - 96% |
| -அன்பு செலுத்துபவர் | - 54% |
| -அதிஷ்டசாலிக்கு | - 72% |
| -தலைமைத்துவம் உள்ளவர் | - 89% |
| -நல்லமனப்பான்மை உள்ளவர் | -100% |

எனவே இந்த 100% புள்ளிகளை ஆசிரியர்கள் பெறவேண்டும் என்பதே எனது அவா.

**முதன் முதலில்........!**

- உலகில் முதன் முதலில் இத்தாலி நாட்டில்தான் மருத்துவமனை அமைக்கப்பட்டது.
- முதன் முதலில் இரத்ததானத்தை இங்கிலாந்து நாடுதான் அறிமுகம் செய்தது.
- முதல் முதலில் தேசியக்கொடியை டென்மார்க் நாடுதான் அறிமுகம் செய்தது.
- முதன் முதலில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கிய நாடு நோர்வே ஆகும்.

**சாப்பிடாதீர்கள் மஞ்சள்கரு!**

ஒரு சாதாரண முட்டையில் 80 கலோரிச் சத்து இருக்கிறது. இதில் 60 கலோரி மஞ்சள் கருவிலும், மிகுதி 20 கலோரி வெள்ளைக் கருவிலும் உள்ளது. இதனால் உடல் பருமன் அதிகம் கொண்டவர்கள் மற்றும் முதியவர்கள் முட்டையின் வெள்ளைக்கருவினை மட்டுமே சாப்பிடுவது நல்லது. மஞ்சள் கருவில் அதிகம் கொழுப்பிருப்பதால் உடல் பருமன் உள்ளவர்கள் அதனைத் தவிர்த்தல் நன்று.

## சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

# ஓய்வுபெற்ற பணியாளர் கௌரவிப்பும் கல்வி உதவு தொகை வழங்கலும்!

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும், பணியாளர் நலன்புரிச் சங்கமும் இணைந்து கடந்த 17-09-2009ல் சங்கப் பணிமனையில் தலைவர் திரு.கி.பூபாலசிங்கம் தலைமையில் ஓய்வுபெற்ற பணியாளர் கௌரவிப்பும், 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மற்றும் பல்கலைக்கழக அனுமதிபெற்ற அங்கத்தவர்கள், பணியாளர்களது பிள்ளைகளுக்கு பண வைப்புச் சான்றிதழ் வழங்கிப் பாராட்டி கௌரவிக்கும் விழாவும் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு.பொ.சிவலிங்கம் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக சமாச பொதுமுகாமையாளர் திரு.ஜே.பி.குணரத்தினம், சமாச கல்வி உத்தியோகத்தர் திரு.வ.சிவகுமார் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக கொடிகாமம் ப.தெ.வ.அ.கூ.சங்க பொதுமுகாமையாளர் திரு வ.தர்மகுலசிங்கம், கூ.அ.உத்தியோகத்தர் திரு.வ.பாலகிருஷ்ணன் ஆகியோரும் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

வரவேற்புரையை சங்கத்தின் கல்வி உத்தியோகத்தர் திரு.க.ப.லோகநாதன் நிகழ்த்தினார். இவ்விழாவின் நாயகியாகிய 60 வயதைப் பூர்த்தி செய்து ஓய்வுபெற்ற தட்டச்சாளர் செல்வி வே.சிவஞானம் அவர்கள் கூ.அ.உ. ஆணையாளரால் தங்கச்சங்கிலி வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இந்நிகழ்வில் பாராட்டி கௌரவிக்கப்பட்டோர் விபரம் வருமாறு,

### பணச்சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்ட அங்கத்தவர், பணியாளர் பிள்ளைகள் விபரம்:-

*பல்கலைக்கழகம் தெரிவாகி ரூபா 10,000 பெறுமதியான பணவைப்புச் சான்றிதழ் பெற்ற மாணவர்கள் விபரம்*

1. **அங்.பெயர்:** கனபதி–மோகனதாஸ்
   **கிளை:** வேம்பிராய்–201
   **மாணவர் பெயர்:** மோகனதாஸ்–சசீதா
   **கற்கைநெறி:** கலைப்பீடம்–2008
2. **அங்.பெயர்:** சின்னத்தம்பி–பரராசசிங்கம்
   **கிளை:** வேம்பிராய்–201
   **மாணவர் பெயர்:** பரராசசிங்கம்–நிரோஜினி
   **கற்கைநெறி:** கலைப்பீடம்–2008
3. **அங்.பெயர்:** கந்தையா–வேலாயுதபிள்ளை
   **கிளை:** வேம்பிராய்–201
   **மாணவர் பெயர்:** வேலாயுதபிள்ளை–விஜிதா
   **கற்கைநெறி:** கலைப்பீடம்–2008
4. **அங்.பெயர்:** சுப்பன்–வடிவேலு
   **கிளை:** கைதடி மேற்கு–189
   **மாணவர் பெயர்:** வடிவேலு–துபிலன்
   **கற்கைநெறி:** முகாமைத்துவம்–2007
5. **பணி.பெயர்:** சின்னையா–ஆனந்தன்
   **பதவி:** காரியாலய உதவியாளர்
   **மாணவர் பெயர்:** ஆனந்தன்–அஜித்தா
   **கற்கைநெறி:** அழகியல்–2008
6. **அங்.பெயர்:** பாலன்–பகவதிராசா
   **கிளை:** வேம்பிராய்–201
   **மாணவர் பெயர்:** பகவதிராசா–கமலினி
   **கற்கைநெறி:** இசைப்பிரிவு–2008

*5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து ரூபா 3,000 பெறுமதியான பணவைப்புச் சான்றிதழும், தண்ணீர் போத்தல், தொப்பி ஆகியனவும் பெற்ற மாணவர்கள் விபரம்*

1. **அங்.பெயர்:** தவசி–தியாகராசா
   **கிளை:** தச்சந்தோப்பு–185
   **மாணவர் பெயர்:** தியாகராசா–சுதர்சினி
   **பெற்ற புள்ளிகள்:** 121 – 2003ம் ஆண்டு
2. **பணி.பெயர்:** திருமதி த.தவமலர்
   **பதவி:** கணக்காளர்
   **மாணவர் பெயர்:** தர்மகுலசிங்கம்–தர்ஷன்
   **பெற்ற புள்ளிகள்:** 142 – 2006ம் ஆண்டு
3. **அங்.பெயர்:** சின்னத்தம்பி–சற்குணநாதன்
   **கிளை:** தச்சந்தோப்பு–185
   **மாணவர் பெயர்:** சற்குணநாதன்–சஞ்சீவி
   **பெற்ற புள்ளிகள்:** 145 – 2007ம் ஆண்டு
4. **அங்.பெயர்:** கிருஷ்ணபிள்ளை–தையல்பாகன்
   **கிளை:** கச்சாய்–206
   **மாணவர் பெயர்:** தையல்பாகன்–நிருஜா
   **பெற்ற புள்ளிகள்:** 149 – 2007ம் ஆண்டு
5. **அங்.பெயர்:** கிருஷ்ணபிள்ளை–அமிர்தலிங்கம்
   **கிளை:** கச்சாய்–206
   **மாணவர் பெயர்:** அமிர்தலிங்கம்–ஜெயசுதன்
   **பெற்ற புள்ளிகள்:** 156 – 2006ம் ஆண்டு
6. **அங்.பெயர்:** வேலன்–சிங்கராசா
   **கிளை:** கைதடி நுணாவில்–191
   **மாணவர் பெயர்:** சிங்கராசா–நிதர்சனா
   **பெற்ற புள்ளிகள்:** 141 – 2008ம் ஆண்டு
7. **அங்.பெயர்:** துரைராசா–மாணிக்கராசா
   **கிளை:** வேம்பிராய்–201
   **மாணவர் பெயர்:** மாணிக்கராசா–டிசோதன்
   **பெற்ற புள்ளிகள்:** 115 – 2008ம் ஆண்டு

### பணியாளர் நலன்புரிச் சங்கம் வழங்கிய கல்வி உதவு தொகை பெற்றுக் கொண்டோர்.

**க.பொ.த.(சா/த) சித்தியடைந்து உயர்தர அனுமதி பெற்று, ரூபா 1,500 உதவு தொகையாக பெற்றுக்கொண்ட மாணவர்கள் விபரம்:–**

1. **பணி.பெயர்:** கந்தையா–தர்மலிங்கம்
   **பதவி:** கணக்குப் பதிவாளர்
   **மாணவர் பெயர்:** தர்மலிங்கம் –கவிராஜ்
2. **பணி.பெயர்:** சின்னக்குட்டி–நவரத்தினம்
   **பதவி:** உற்பத்தி முகாமையாளர்
   **மாணவர் பெயர்:** நவரத்தினம்–நிவேதன்

**பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி ரூபா 3,000 உதவு தொகையாக பெற்றுக் கொண்ட மாணவர் விபரம்:–**

1. **பணி.பெயர்:** சின்னையா–ஆனந்தன்
   **பதவி:** காரியாலய உதவியாளர்
   **மாணவர் பெயர்:** ஆனந்தன்–அஜித்தா

*தொகுப்பு:–*
**க.ப.லோகநாதன்**
*கல்வி உத்தியோகத்தர்*



# வளமான வாழ்க்கைக்கு வாசிப்பு அவசியம்!

இன்றைய காலத்தில் மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கம் அருகி வருகின்றமை கண்கூடு. இது எப்பொழுதுமே தகாதது! ஏனெனில் நவீன மயமாக்கப்பட்ட நடைமுறைகளும், நடவடிக்கைகளும் ஆகும்.

இவர்கள் தொலைக்காட்சி பார்ப்பதிலேயே தமது நேரத்தில் பெரும்பகுதியை செலவிடுகின்றனர். சில மாணவர்கள் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் கிரிக்கெட் மற்றும் திரைப்படங்களைப் பார்ப்பதற்காகவே பாடசாலைக்கே செல்லாது விடுகின்றனர். இதனால் இவர்களது கல்வி பெரிதும் பாதிக்கப்படுகிறது. கற்க வேண்டிய நேரம் வீண்விரயமாகிறது. இதன் காரணமாக அவர்களுடைய கல்வித் தரமே குன்றுகிறது. மாணவர்கள் தமது பொழுதைப்போக்குவதற்காக தொலைக்காட்சியையே அதிகம் நாடுகின்றனர். அதேவேளை நல்ல நண்பர்கள் எனக் கருதத்தகும் நூல்களை வாசிக்க தவறிவிடுகின்றனர். மிக அருமையாகவே ஒருசில நூல்களை வாசிக்கின்றனர். வாசிப்புக்கு செலவிடும் நேரம் மிகக் குறைவாகவே உள்ளது.

*"நூல் பல கல்"* என்றார் ஔவைப் பாட்டி. எவ்வளவு நூல்களை நாம் வாசிக்கின்றோமோ அவ்வளவுக்கு எமக்கு அறிவு பெருகும். கண்டதும் கற்கப் பண்டிதனாவான் என்பது ஆன்றோர் வாக்கு. இதுபோலவே நானுமறிந்த ஒரு பொன்மொழி வரியாக *"மனிதன் ஆறடியானால் அறிவு பன்னிரண்டு அடியாக இருக்க வேண்டும்"* அதாவது இரண்டு மடங்காக வேண்டும். ரஸகீன் என்கின்ற ஆங்கில அறிஞர் *"புத்தகங்களை போன்ற சிறந்த கருவூலம் வேறெதுவும் மனிதனுக்கு இருக்க முடியாது"* எனக் கூறுகின்றார். வேறு செல்வங்களை கள்வர்கள் களவாடி சென்று விடலாம். ஆனால் புத்தகங்கள் பொதுவாக களவாடப்படுவதில்லை. புத்தகங்கள் வாசிப்பதால் ஒருவன் பெற்ற இன்பங்களை மற்றவர்கள் தட்டிப் பறித்துவிட முடியாது. வாசிக்கும் பழக்கமில்லாதவர்களின் வாழ்க்கை இருண்டதாகவே இருக்கும்.

**செ.யசீதரன், தரம்-9M**
**புத்தூர் J/S/S/C**

வாசிப்பின் மூலம் அறிவு விருத்தியடைகிறது. அறிவை பெற்றுக்கொள்ள முடிகிறது. புதிய தகவல்களை தெரிந்துகொள்ளவும், கிரகித்துக்கொள்ளவும், திறன்களை வளர்த்துக்கொள்ளவும் முடிகிறது. வாழ்வு வளம்பெற அறிவு தேவை. அறிவைப் பெருக்க நூல்களை வாசித்தல் அவசியமாகிறது. நூல்களை வாசிக்கும்போது நல்ல பயன் தரும் நூல்களை தேர்ந்தெடுத்து வாசிக்க வேண்டும். அப்போதுதான் நாம் விரும்பிய மனநிறைவைப் பெற முடியும். வாசித்தல் சிறந்ததோர் பொழுதுபோக்கு. மகிழ்ச்சியைத் தந்து, அறிவைப் பெருக்க உதவுவன நூல்களேயாகும். மாணவர்கள் இதனை மனதில் கொள்ளுதல் அவசியமாகும்.

**கண்ணுடைய ரென்பர் கற்றோர் முகத்திரண்டு**
**புண்ணுடையர் கல்லாதார்.**

என்றார் திருவள்ளுவர்.

ஊனக்கண்ணினும் ஞானக் கண்ணே-அறிவுக்கண்ணே சிறந்தது என்பதை இக்குறள் நன்கு புலப்படுத்துகிறது. கல்வி எனும் பெருஞ்செல்வத்தை வழங்குவன நூல்களேயாகும். அவற்றை வாசிப்பது நம் வாழ்வுக்கு மிகவும் அவசியமானது.

நூல்களை வாசிக்கும் பழக்கம் உடையவர்கள் தனிமை உணர்வை ஒருபோதும் பெறுவதில்லை. ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் நூல்களை அவர்கள் நாடிச் சென்றுவிட முடியும். வாழ்வில் சலிப்போ, சோர்வோ ஏற்படுகின்றபோதெல்லாம். விரும்பிய நூல்களை படிப்பதன் மூலம் அவற்றைப் போக்கிக்கொள்ள முடியும். *"என்னை எத்தச் சந்தர்ப்பத்திலும் கைவிடாத நண்பர்கள் புத்தகங்களே!"* எனக்கூறினார் ஆங்கிலக் கவிஞர் ஒருவர். புத்தகங்களைப் போன்ற நண்பர்கள் கிடைப்பது அரிது. எமது நண்பர்கள் மனமாற்றமடைந்து நம்மை விட்டு பிரிந்து விடலாம். ஆனால் புத்தகங்களோ கலந்துரையாடக் காத்திருப்பவை. நம்மை அறிவூட்டும் ஆசான்களாக புத்தகங்கள் இருக்கின்றன. அவற்றை நாம் நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் புத்தகம் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஒரு முக்கிய கடமையாக அதைக் கொள்ளுதல் வேண்டும்.

இப்பொழுதுதான் எனக்கும் ஞாபகம் வருகிறது. அன்றொருநாள் தினக்குரல் பத்திரிகையில் ஓர் பாடல் வாசித்தேன். அதனை நீங்களும் படியுங்கள்.

*கல்வி ஒரு வெகுமதி*
*–ஏற்றுக்கொள்*
*கல்வி ஒரு போராட்டம்*
*–வென்றுகாட்டு*
*கல்வி ஒரு கடமை*
*–நிறைவேற்று*
*கல்வி ஒரு சந்தர்ப்பம்*
*–நழுவவிடாதே*
*கல்வி ஒரு விளையாட்டு*
*–ஈடுபடு*
*கல்வி ஒரு பயணம்*
*–சென்றுமுடி*

ஆகவே நாம் கல்வியை கற்க வேண்டுமாயின் வாசிப்பு முக்கியம்.

மாணவர்கள் கல்வி அறிவைப் பெற்றுக்கொள்ளும் மிக முக்கிய வழிகளில் ஒன்று ஆசிரியர்களுடன் பரஸ்பர உறவாடுதல் ஆகும். பெற்றோர்களே, பாதுகாவலர்களே தமது பிள்ளைகளுடன் உரையாடி அவர்களது கேள்விகளுக்கு ஈடுபாட்டுடன் பதிலளித்தல் போன்ற செயற்பாடுகள் கல்வி கற்றலை செம்மையாக்க உதவுகிறது. மாணவர்கள் புத்தகங்களை வாசித்து விளங்கிக் கொள்வதற்கு முடியாவிட்டாலும் பாட்டுக்கள், கதைகள் மூலம் அவர்களின் மொழித்திறனை வளர்க்கலாம்.

எனவே *"வாசிப்பு மனிதனை பூரணமாக்குகின்றது"* என்றார் பேக்கன் எனும் அறிஞர். அவரது கூற்று சரியே. நாம் ஓய்வுநேரத்தை புத்தகங்கள் வாசிப்பதிலே செலவிட வேண்டும். நாம் சிறுவயது முதல் வாசிப்பு பழக்கத்தை வளர்த்துக்கொண்டால் அது நாளடைவில் அறிவும், ஆற்றலும், பண்பும் மிக்கவர்களாக நாம் வாழ்வதற்கு வழிகாட்டும். வாசிப்பதால் நாம் வையத்துள் வாழ்வாங்கு வாழும் நெறியினை அறிந்துகொள்ள முடியும்.

# சந்தைப்படுத்தல்

# MARKETTING

சென்ற இதழ்த் தொடர்ச்சி

➢ தேவை:- மனிதன் உயிர் வாழ்வதற்கு அவசியமாகக் காணப்படுகின்ற காரணிகள் யாவும் தேவைகள் எனக் குறிப்பிட முடியும். அதாவது உணவு, உடை, கல்வி, சுகாதாரம், ....... என்பன தேவைகளுக்குள் உள்ளடக்கப்படுகின்றது. இத்தேவைகளானது பின்வருமாறு வகைப்படுத்தப்படும்.




➢ விருப்பம்:- தேவைகளின் காரணமாக உளவியல் ரீதியாகத் தோன்றுகின்ற நாட்டங்கள் யாவும் விருப்பமாகும். இவ் விருப்பங்கள் யாவும் உளவியல், குடும்பப் பின்னணிகள் மற்றும் வாழ்க்கை முறைகள் என்பன விருப்பத்திற்கு அடிப்படையாகும்.

➢ கேள்வி:- தேவை, விருப்பம் என்பவற்றுடன் கொள்வனவு வலுவும் இணையும் போது ஏற்படுவது கேள்வியாகும். இக் கேள்வியானது பொதுவாக கொள்வனவுகளில் ஏற்படுகின்ற பணத் தேவைகளிலேயே பெரிதும் தங்கியுள்ளது. எனவே வருமானம் மாற மாற கேள்வி என்பதும் மாற்றமடையும்.

செல்வி மதனரூபி-பாரதிதாசன்
அல்வாய்.

➢ உற்பத்தி:- மனித தேவைகளுக்கு உரியவற்றை ஆக்குவதற்காக பயன்படுத்தப்படுகின்ற பொருட்கள், சேவைகள், எண்ணம், இடம், நபர், செயற்பாடுகள் போன்றவற்றின் தொகுப்பினை உற்பத்தி எனக்குறிப்பிட முடியும். எனவே உற்பத்தியானது பின்வருமாறு வகைப்படுத்தப்படும்.

1) வேலை உற்பத்தி/அலகு உற்பத்தி
2) தொகுதி உற்பத்தி.
3) பாய்ச்சல் உற்பத்தி.
4) குழுத் தொழில்நுட்பம் (Group Technology)

➢ பரிமாற்றம்:- உற்பத்தியாளனிடமிருந்து பொருட்கள் நுகர்வோனுக்குக் கிடைக்கச் செய்கின்ற பல்வேறுவிதமான பரிமாற்ற/விநியோக வழிகளையே பரிமாற்றம் என்பது குறிப்பிடுகின்றது. அதாவது ஆரம்பங்களில் விநியோகமானது உற்பத்தியாளனிடமிருந்து மொத்த வியாபாரி, சில்லறை வியாபாரி, நுகர்வோன் என இடம்பெற்றது. ஆனால் தற்காலத்தில் விநியோகமானது உற்பத்தியாளனிடமிருந்து நேரடியாக நுகர்வோனுக்கு சென்றடைகின்றது. தற்போது இடைத்தரகர்களின் செயற்பாடுகள் குறைக்கப்பட்டுள்ளது.

➢ சந்தை:- சந்தை எனும்பொழுது நுகர்வோன் எங்கே தமது தேவைகளை பூர்த்தி செய்கின்றானோ அவ்விடங்கள் யாவும் சந்தைகளாகும்.

குறிப்பாக தற்போதைய நவீன தகவல் தொழில்நுட்ப முன்னேற்றத்தில் இன்ரநெற், ஈ-மெயில் மூலமான சந்திப்புக்கள் இடம்பெறுவதனால் அவையும் சந்தையாகக் குறிப்பிடப்படுகின்றது.

முற்றும்.

## கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்

## கூட்டுறவுதின விழா-2009 ல் கௌரவிக்கப்பட்டோர்

தொகுப்பு: சு.சிவலிங்கம்

**சிறந்த உறுப்பினர், பணியாளர்களாக தெரிவுசெய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டோர்.**

| சிறந்த உறுப்பினர்கள் | கிளை |
|---|---|
| மா.கிருஷ்ணானந்தம் | 28 |
| க.கனகரத்தினம் | 29 |
| ந.நவரத்தினம் | 30 |
| ஐ.நாகராசா | 31 |
| க.சிவானந்தன் | 32 |
| நா.மகேந்திரம் | 33 |
| பி.கிளேசியஸ் | 34 |
| செ.கணேசவேல் | 35 |

| சிறந்த பணியாளர்கள் | பதவி |
|---|---|
| ந.குணசேகரம் | கி.முகாமை. |
| தா.தவக்குமார் | கணக்காளர் |
| ஐ.செல்வக்குமார் | உற்.முகாமை. |

**உறுப்பினர், பணியாளர் பிள்ளைகளில் புலமைப்பரிசில் சித்தியடைந்தவர்களுக்கான கல்விக்கொடை.**

| மாணவர்கள் பெயர் | |
|---|---|
| செல்வன் உதயகுமார்-கிருசாந் | (உறு.) |
| செல்வி பிரபாகரன்-பிரவினா | (உறு.) |
| செல்வி ஜெயசீலன்-விதுசா | (பணி) |

**உறுப்பினர், பணியாளர் பிள்ளைகளில் க.பொ.த(சா/த) சித்தியடைந்தவர்களுக்கான கல்விக் கொடை.**

| மாணவர்கள் பெயர் | |
|---|---|
| சிவனேசமூர்த்தி-தயாளினி | (உறு.) |
| சின்னராசா-மிதுலா | (உறு.) |
| செல்வராசா-உமாயினி | (உறு.) |
| யோகேஸ்வரன்-பிருந்தா | (உறு.) |
| அருமைரத்தினம்-மயிதா | (உறு.) |
| கவீந்திரன்-சுபலா | (பணி.) |
| குணசேகரம்-திருபரன் | (உறு.) |
| தருமலிங்கம்-சாரங்கன் | (உறு.) |

**மரணமடைந்த உறுப்பினரின் பிள்ளைக்கான மாதாந்தக்கல்விக் கொடை.**

- நாகராசா-பிரதீப்

**விவசாய ஓய்வூதியத்திட்டத்தில் இணைந்த 28 பேருக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.**

**மரணமடைந்த உறுப்பினர்களின் குடும்ப அங்கத்தவர் கௌரவிப்பு.**

- திருமதி நாகராசா-பத்மலோஜினி
- திருமதி தருமலிங்கம்-கிருபாமலர்

**சங்கமட்ட மாதாந்த ஓய்வூதியம்**

- திருமதி நாகராசா-பத்மலோஜினி

**உறுப்பினர் பிள்ளைகளில் 39 பேருக்கும், பணியாளர் பிள்ளைகள் 19 பேருக்கும் சிறுவர் சேமம் வைப்பு செய்யப்பட்டது.**

- திருமதி நாகராசா-பத்மலோஜினி

**சங்கம் வழங்கும் பாடசாலை உபகரணங்கள் 155 உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கும், 19 பணியாளர்களின் பிள்ளைகளுக்கும் வழங்கப்பட்டன.**

## வெஸ்ரன் யூனியன் பணப்பரிமாற்ற சேவை!

அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ.சங்கம் தனது கிராமிய வங்கியின் ஊடாக வெஸ்ரன் யூனியன் பணப்பரிமாற்ற சேவையை 30-10-2009ல் ஆரம்பிக்க உள்ளதாக சங்க பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இவ் ஆரம்ப விழா சங்கத் தலைவர் தலைமையில் நடைபெறவுள்ளதோடு, இதில் பிரதம விருந்தினராக மா.கூ.அ. அலுவலர் இ.பாலச்சந்திரனும், சிறப்பு விருந்தினர்களாக வெஸ்ரன் யூனியன் இயக்குனர் ஏட்றியன்-கொறேரர், வெஸ்ரன் யூனியன் தேசிய விற்பனை முகாமை யாளர் சுதர்சன் சுப்பிரமணியம், வெஸ்டன் யூனியன் வடமாகாண இணைப்பாளர் ஜெ.ஜெயதாஸ் மற்றும் ஏனைய பல பிரமுகர்களும் கலந்துகொள் ளவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

**பனை .... 1ம்பக்க தொடர்ச்சி**

நலத்திட்டம், கல்வி மேம்பாட்டுத் திட்டம், சமூக நலத்திட்டம் போன்ற திட்டங்களை வரைபடங்கள் மூலம் காட்சிப்படுத்தியிருந்தது.

சமாசத்தின் மேற்படி செயற்பாட்டுத் திட்டங்கள் தொடர்பாக வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் எஸ்.சுப்பிரமணியசர்மா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறிக்கு போதிய விளக்கமளித்ததையடுத்து ஆளுநர் சமாசத்தின் செயற்பாடு குறித்து பாராட்டு தெரிவித்தார்.

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை தான். மேற்கொண்டு வரும் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகள் சம்பந்தமான வரைபடம் ஒன்றினையும் காட்சிப்படுத்தியிருந்தது.

யாழ்.மாவட்ட சித்த மருந்துகள் உற்பத்தி விற்பனவு வைத்திய சேவைக் கூட்டுறவுச் சங்கம் தனது மருத்துவ உற்பத்திகளை அங்கு காட்சிப்படுத்தியிருந்தது.

**ஜனாதிபதி.... 1ம்பக்க தொடர்ச்சி**

செய்துதருமாறும், கூட்டுறவுக் கல்வியை அபிவிருத்தி செய்வதற்குரிய நவீன கற்பித்தல் சாதனங்களை பெற்றுத்தருமாறும் மேலும் பல கோரிக்கைகளை முன்வைத்தும் கலந்துரையாடி கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர்.



சமாசத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட மதுவரி திணைக்கள ஆணையாளருடனான தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் கலந்துரையாடல் நிகழ்வில் கலந்துகொண்ட மதுவரி ஆணையாளர், சமாசத் தலைவர், சமாசப் பொதுமுகாமையாளர், மற்றும் வலிகாமம் கொத்தணியின் தலைவர் ஆகியோரைப் படத்தில் காணலாம்.


## அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

**பணப்பரிமாற்ற சேவை**

Western Union Money Transfer

அச்சுவேலியில் முதன் முறையாக உலகம் முழுவதிலிருந்தும் பணப்பரிமாற்றம்

WESTERN UNION

மணி டிரான்ஸ்பர்

MMBL Money Master

**இயந்திர சேவைகள்**

- டிஜிட்டல் நிழற்படப் பிரதி சேவை. Digital Photo Copies
- கவரிடுதல். Laminating

**கூட்டுறவு புத்தக நிலையம் CO-OP BOOK CENTRE**

- மலிவு விலையில் அப்பியாசக் கொப்பிகள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் வழங்குதல்,
- அங்கத்தவர்களுக்கான உள்ளீடுகள் மலிவு விலையில் பெற்றுக் கொடுத்தல்

**மகளிர் சேவை**

- தையல், மனைப்பொருளியல் பயிற்சி வழங்குதல்.
- சுயதொழில் ஊக்குவிப்பு வழங்குதல்
- கைத்தொழில் உற்பத்தியை ஊக்குவித்தல்.

**கிராமிய வங்கிச் சேவை**

- நிலையான வைப்பு கடன்சேவை.
- ஓய்வூதிய சேவை.
- பரிசில் திட்டம்.

**எமது சேவைகள்!**

**கல்விச் சேவை**

- முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு வழங்குதல்.
- பாடசாலை உபகரணங்கள் வழங்குதல்.
- ஆசிரியர், மாணவர்களுக்கான சீருடை வழங்குதல்.
- புலமைப்பரிசில் வழங்குதல்.
- மேற்படிப்புக்கான உதவுதொகை வழங்குதல்.

**அங்கத்தவர் நலத்திட்டம்**

- ஓய்வூதியம் வழங்குதல்.
- விபத்து மரணக்கொடை வழங்குதல்.
- ஓய்வுபெற்ற அங்கத்தவர் கௌரவிப்பு.
- விழா நடத்துதல்.
- சிறந்த அங்கத்தவர் கௌரவிப்பு.
- கல்வி பயிற்சி வழங்குதல்.

பதிவு இல: J/1574-19.02.1972

021-3213566


இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு இல.52, சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2009ம் ஆண்டு அக்டோபர் மாதம் வெளியிடப்பட்டது.